**O.S.No.69/2018**

பி.வா.சா.1, திருமதி.சிலையக்காள்
நாள் :18.02.2026 நேரம் : 12.05 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)தாவா சொத்து ஆதியில் தில்லை சுந்தரதேவர் பெயரில் இருப்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளோம். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியாது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் அம்மாகண்ணு மற்றும் தாயார் இருளாயி பெயரில் ஏதாவது ஆவணங்கள் தாவா சொத்துக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பெரியப்பா செல்லசாமி பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எனது பெரியப்பா செல்லசாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 ஆண்மக்கள் மற்றும் 2 பெண்மக்கள் ஆவார்கள். மேற்படி எனது பெரியப்பாவின் வாரிசுகளிடமிருந்து எதாவது ஆவணம் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி செல்லசாமியின் தகப்பனார் பெயர் பிச்சைதேவர் என்றால் சரிதான்.

2)மேற்படி பிச்சைதேவரின் தம்பி பெயர் இருளத்தேவர் என்றால் சரிதான். இருளத்தேவரின் மகன் தான் வாதியின் தகப்பனார் ராமுதேவர் என்றால் சரிதான். இருளத்தேவரின் மனைவி பெயர் மீனாள் என்றால் இல்லை. அவர் மனைவி பெயர் எனக்கு தெரியாது. இருளத்தேவரின் மனைவி பெயர் மீனாள் தான் என்றாலும், வழக்கிற்காக நான் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. SLR ல் உள்ள இருளாண்டிதேவர் மனைவி மீனாள் என்பது இருளத்தேவர் மற்றும் அவரின் மனைவியையும் குறிக்கும் என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் இருளத்தேவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு அவருக்கு பின்னர் வாதியின் தகப்பனார் ராமுதேவருக்கு பாத்தியப்பட்டு ராமுதேவரின் மக்களுக்குள் ஏற்பட்ட பாகபிரிவினையில் தாவா சொத்துகள் வாதிக்கு கிடைக்க பெற்றது என்றால் சரியல்ல.

3)தாவா சொத்து எனது சொத்து என்பதை காட்டும் வகையில் எனது தகப்பனார் பெயரிலோ அல்லது தாயார் பெயரிலோ இருந்த எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் இல்லை என்பதால் தான் எனது பாத்தியத்தையும், அனுபவத்தையும் காட்டக்கூடிய எந்தவொரு அசல் ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வாதியின் தாயார் காளிமுத்தம்மாள் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து இதே வழக்கறிஞரை வைத்து நாங்கள் எதிர்வழக்காடினோம் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் தாவா சொத்துகள் உள்ளிட்ட சொத்துகள் சம்மந்தமாக ரங்கசாமிதேவர் வகையறாவிற்கும், செல்லசாமிதேவர் வகையறாவிற்கும் பரமக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 201/1960 வழக்கு நடந்ததாகவும் மேற்படி வழக்கில் ஏற்பட்ட சமரசம் காரணமாக எங்கள் தரப்பினருக்கு 2/3 பாகம் கிடைத்ததாகவும், அவ்வாறு கிடைத்த சொத்துகளில் தாவா சொத்துகளும் அடங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண். 201/1960 பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

4) மேற்படி வழக்கு பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி வழக்கின் தீர்ப்பு எனது கைவசம் உள்ளது என்றும், அந்த தீர்ப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எங்களுக்கு எதிராக போய்விடும் என்பதால் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு செட்டில்மென்ட் காலத்திலேயே வாதியின் தாயார் பெயரில் பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்டது என்றாலும் அதன் பின்பு நிலவுடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் வாதியின் தாயாருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றாலும் இன்றுவரை வாதியின் தாயார் பெயரிலேயே தாவா சொத்துகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நிலவுடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் வாதி தரப்பில் பட்டா மாறியுள்ளது. நாங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணமான

அசல் வழக்கு எண். 122/2004 வழக்கின் தீர்ப்பில் தாவா சொத்துகளுக்குரிய பட்டா பாஸ்புத்தகம், யூடிஆர் பட்டா , ஐந்து நில வரி ரசீதுகள், சிட்டா ஆகியவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது சம்மந்தமாக விவாதிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நாங்கள் எந்த காலத்திலும் பாத்திய அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும் , வாதியும் அவர்களின் முன் பாத்தியஸ்தர்களுமே தொடர்ச்சியாக அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

5)அசல் வழக்கு எண். 122/2004 ல் வாதியின் தாயாரால் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்பதாலும், மேற்படி வழக்கு காலத்திலேயே நாங்கள் வாதியின் தாயாருக்கு இடையூறு செய்வதை நிறுத்தி கொண்டோம் என்பதாலும் வாதியின் தாயார் மேற்படி முன் வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டார் என்றாலும் சரியல்ல. மேற்படி முன்வழக்கு இந்த வழக்கிற்கு எந்தவிதத்திலும் முன் தீர்ப்பு தடையால் தடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ஒரு ஆவணம் கூட தாவா சொத்துகளில் எனக்குள்ள பாத்திய அனுபவத்தை காட்டக்கூடியவை இல்லை என்றாலும் வாதியின் ஆவணங்களையே நகல் எடுத்து வழக்கில் தாக்கல் செய்து வாதியின் சொத்தை அபகரிப்பதற்காக எதிர்வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.30 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.18 16:25:38 +0530